**கற்றல் & கற்பித்தல்**

- அலகு 1:
- கற்றல் இயல்புகள்
- நோக்கங்கள்
- கற்றல் மற்றும் கற்றலின் அடிப்படைக் கொள்கைகளையும் அதன் தன்மைகளையும் புரிந்து கொள்ளுதல்
- செயல்முறை கற்றல் அவற்றின் உட்குறிப்புகளின் கொள்கைகள் உத்திகளை அறிந்து கொள்ளுதல்.

நோக்கங்கள்:

- பொருள் உணர்ந்து கற்றலையும் பொருள் உணரா கற்றலையும் அதன் வேறுபாட்டினையும் அறிந்து கொள்ளுதல்
- சுயகற்றலின் வரையறை நன்மைகளை பகுத்து அறிதல்
-

  கற்றல் என்பது நடத்தை மாற்ற செயல்
- கற்றலின் கூறுகள் உற்சாகம் ஊட்டக்கூடியதாகவும் சுவாரஸ்யமானதாகவும் இருக்கும்
- அறிவு மற்றும் திறன்கள் கற்றலில் இருந்து பெற்றது
- நடைமுறை பயிற்சி மற்றும் அனுபவத்தின் மூலம் நடத்தையை மாற்றி அமைத்தல், கற்றல் ஒரு தனிப்பட்ட தழுவலின் முக்கியத்துவமாகும்.
- கற்றல் : வகுப்பறை கற்றல் காட்சி படங்களைகொண்டு கற்பித்தலை உணர்த்துகின்றது
- கரும்பலகை மற்றும் கணினி வழி கற்றல் கற்பித்தலை மேம்படுத்துகிறது.

வரையறை:

- கற்றல் வரையறை

- கற்றல் நம் வாழ்க்கையை வளப்படுத்தும் அனைத்து திறமைகளையும் திறன்களையும் பெற்று இருக்கிறது. இது ஒரு புத்தகம் அல்லது ஆசிரியரால் கற்பிக்க வேண்டியதில்லை.
- கற்றல் ஒரு நடத்தை மாற்றமாகும்-- பரிகாப்பு பஞ்சப்பூன்
- நடத்தை மேம்பாட்டினையும் வெளிப்புற ஒருங்கிணைப்பையும் ஒருங்கிணைத்து அறிவது கற்றல் -- அபிஷா பெர்ட்

கற்பித்தல்:

- கற்பித்தல் கற்றல் கூறுகளை உள்ளடக்கியது.
- செயல் ஆர்வத்துடன் ஒருவர் கற்றலில் பங்கேற்றலையும் சரியான கற்பித்தலையும் வழி நடத்துகின்றது.
- உதாரணம் மாண்டிசோரி முறை, கிண்டர்கார்டன் முறை

கற்றல் கூறுகள்:

- கற்றல் கூறுகள்
- 1.நேர்காணல்
- 2. கூட்டு திறன்கள்
- 3. கற்றல் என்பது ஒரு செயல்
- 4. கற்றல் என்பது நுண்ணறிவு
- 5. குழு செயலாக்கம்
- 6. நேர்மறையான ஒற்றுமை
- 7. திறன்
- 8. தகுதி
- 9.ஆர்வம்
- 10. குடும்பம் மற்றும் கலாச்சார பின்னணி
- நேர் காணல் :
- ஒருவருக்கொருவர் கருத்துக்கள் மற்றும் நுண்ணறிவு திறனை பகிர்ந்து கொள்வதற்கான நேர் காணலை கற்றல் மேற்கொள்கிறது.

- கூட்டு திறன்கள்
- தலைமை கூட்டணி, மோதல் தீர்மானம் மற்றும் திறமைகள்
- கற்றல் என்பது ஒரு செயல்
- ஆர்வத்துடன் ஒருவர் கற்றலில் பங்கேற்றல்
- குழு செயலாக்கம்
- குழுவானது கல்வி சார்ந்த பொருள்கள் அல்லது செயல்திறன்களில் இருந்து ஒதுங்கி செயல்படுகிறது என்பதை குறிக்கும்
- நேர்மறையான ஒற்றுமை
- குழுவின் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் இருத்தல்
- திறன்
- மாணவர்களின் இயல்பான திறன் மற்றும் வெற்றிகரமான வாய்ப்பையும் பயன்பாட்டிற்கான தகவலையும் தீர்மானிக்கிறது.
- தகுதி
- மாணவர்களின் உள்ளார்ந்த திறமையினை பரிசீலிக்கிறது
- ஆர்வம்
- மாணவர்கள் முறையீடு மற்றும் கற்றலில் உள்ள ஆர்வம் மூலம் கொடுக்கப்பட்ட பாடங்களை தங்கள் திறமைக்கு ஏற்ப வெளிப்படுத்துவார்.
- குடும்பம் மற்றும் கலாச்சார பின்னணி
- பல்வேறு சமூக பொருளாதார பின்னணியில் இருந்து மாணவர்கள் வளர்ந்து வரும் நடைமுறைகளின் வேறுபாடு காரணமாக ஒரு பரவலான நடத்தையை வெளிப்படுத்துவார்கள்.
- மனப்பான்மை
- தனிப்பட்ட மன நிலைகள் மற்றும் நேர்மறை அணுகுமுறை ஆர்வத்தையும், பொறுப்பு, படைப்பாற்றல் மற்றும் நிலைத்தன்மைகளை பெற்று இருக்கிறது
- மாணவர் ஈடுபாடு

- கற்றல் என்பது ஒரு முக்கியமான தனிப்பட்ட அனுபவம். இந்த அனுபவத்தில் நாம் மாணவர்களை ஈடுபடுத்திக் கொள்ளுதல் அவசியம்

கற்றல் தன்மைகள்:

- கற்றல் தன்மைகள்
- கற்றல் அனைத்து உயிர்களிடத்தில் காணப்படுகிறது
- கற்றல் தொடர்ச்சியானது. கருவறை முதல் கல்லறை வரை தொடர்ந்து நிகழ்வது
- கற்றல் பன்முகம் கொண்டது
- புலன் காட்சி கற்றல்
- உடல் இயக்க கற்றல்
- கருத்தமைவு கற்றல்
- மனவெழுச்சி கற்றல்
- பிரச்சினை தீர்க்க கற்றல்

கற்றல் தொடர்பான அடிப்படை கோட்பாடுகள்:

- கற்றல் என்பது வளர்ச்சியின் ஒரு வடிவம்
- உடல் வளர்ச்சியோடு பயிற்சி மற்றும் அனுபவம் சேரும் போது உடல் இயக்க மேம்பாடு ஏற்படுகிறது
- கற்றல் என்பது சூழ்நிலைக்கு ஏற்றவாறு தகவமைத்து கொள்ளுதல்
- கற்றல் என்பது அனுபவங்களை ஒழுங்காக அமைத்து கொள்ளுதல்
- கற்றல் என்பது நோக்கத்தோடு கூடியது
- கற்றல் என்பது அறிவார்ந்த செயல்
- கற்றல் என்பது துடிப்புடன் கூடிய பங்கேற்பு
- கற்றல் என்பது தனி நபர் சார்ந்ததாகவும் சமூக சூழல் சார்ந்ததாகவும் உள்ளது
- கற்றல் என்பது வெளியில் இருந்து திணிக்க கூடியது அன்று

கற்றல் கோட்பாடுகள் உணர்த்துபவை:

- குருட்டு மனப்பாடம் செய்வதை விட பொருள் அறிந்து கற்றலே சிறப்பானது மற்றும் பயன்மிக்கது
- சுயகற்றலுக்கு வழிவகுக்கும்
- பொருள் அறிந்து கற்கும் போது கற்றல் செயலில் கற்போர் ஈடுபட்டு முழு கற்றலை அறிந்து கொள்ள முடிகிறது.
- கற்றலில் தனியாள் வேறுபாடு காணப்படுகிறது.
- நேர்காணல், விவாதம் கலந்துரையாடல் மற்றும் விளக்கப்படங்கள், கேலிச்சித்திரங்கள்,அட்டை படங்கள், திரைக்காட்சி, கணினி வரைபடங்கள் அறிந்து கொள்ள முடிகிறது
- குருட்டு மனப்பாடம் செய்தலும் பொருள் அறிந்து கற்றலும்:
- குருட்டு மனப்பாடம் செய்தல்:
- கற்றவற்றை திரும்ப அப்படியே அடி பிசகாமல் வெளிப்படுத்துதல் மாறாக கற்கப்பட்ட பொருள் சரியா தவறா என்பதை பற்றி அக்கறை காட்டப்படுவதில்லை .
- பொருள் அறிந்து கற்றல்:
- பொருள் அறிந்து கற்றலில் கற்போர் தாம் கற்க வேண்டியவற்றை புரிந்து கொண்டு உள்வாங்கி கொள்கின்றனர் . அதனால் தாம் கற்றவற்றை அப்படியே தனது மொழியில் தெரிவிக்க முற்படுகிறார்கள்.
- குருட்டு மனப்பாடம் செய்து கற்றல் பொருள் உணர்ந்து கற்றல் ஓர் ஒப்பீடு:
- **குருட்டு மனப்பாடம் செய்து கற்றல்:**
- துடுப்பின்றி அதாவது ஈடுபாடு இன்றி நடைபெறும் செயல்
- கற்பிக்கப்பட்டவை திரும்ப அடிபிசகாமல் வெளிப்படுத்தப்படும்
- கற்றலில் விருப்பார்வம் குறைகிறது

- கற்போர் பங்கேற்பின்றி நடைபெறும் செயல்
- விருப்பார்வம் குறைகிறது
- கற்றலின் வெளியீடு குறைவாக இருக்கும்

**பொருள் உணர்ந்து கற்றல்:**

- முழு ஈடுபாட்டுடன் துடிப்பாக நடைபெறும் செயல்
- கற்பிக்கப்பட்டவை அவரவர் பாணியில் தனித்தன்மை கொண்டு வெளிப்படும்
- கற்போரின் முழு பங்கேற்புடன் நிகழும் செயல்
- கற்றல் வெளியீடு எப்போதும் சமமாகவும் அதிகமாகவும் இருக்கும்

துடிப்புடன் செயல்பட்டு கற்றல்:

- பொருள்
- கற்றல் என்னும் செயல்பாட்டில் மாணவர்கள் நேரிடையாக ஈடுபட்டு அனுபவ ரீதியாக கற்று அறிந்து கொள்வது துடிப்புடன் செயல்பட்டு கற்றல்
- வரையறை
- கற்றல் என்னும் செயல்பாட்டில் மாணவர்கள் நேரிடையாக பங்கேற்று அனுபவ ரீதியாக கற்று அறிந்து கொள்வது
- மாணவர்கள் கற்றல் செயல்பாட்டில் எந்த அளவு தம்மை ஈடுபடுத்தி கொள்கிறார்கள் என்பதை பொறுத்து துடிப்புடன் செயல்பட்டு கற்றல் வெவ்வேறு நிலைகளை உணர்த்துகிறது

கற்றல் கோட்பாடுகள்:

- கற்றல் என்பது கற்பவர் தம் பெரும் தகவல்களை பொருள் உடையதாக்கிக்கிடும் செயலாகும்
- தன்னியல்பாக நிகழும் விளையாட்டு மற்றும் திட்டமிடப்பட்ட நோக்கத்துடன் கூடிய விளையாட்டு
- கருத்துக்களை கற்றல் மற்றும் ஏதெனும் ஒன்றை செய்திட கற்றல் இரு வெவ்வேறு செயல்பாடுகள்

- எதையும் தேடிச்சென்று ஆராய்தல் மற்றும் நிகழ்வுகளும் வாழ்க்கை அனுபவங்களுக்கும் குவிமையம் கொண்ட கற்றல் மற்றும் கற்பித்தல்
- கருத்துக்களை கற்றல் ஏதெனும் ஒன்றை செய்திட கற்றல் இரு வெவ்வேறு செயல்பாடுகள்

கற்றல் செயல்களின் பண்புகள்:

- நோக்கத்துடன் கூடிய செயல் :
- கற்றலின் போது ஈடுபடும் செயல் பொருள் உணர்ந்து கற்றலுக்கு உதவிடுவதாக அமைந்து இருத்தல்
- உறுதியாக சிந்தித்தல்
- மாணவர்கள் தாம் கற்றவை குறித்து உறுதியாக சிந்தித்தல்
- கலந்துரையாடுவது :
- கற்றலின் இலக்குகளையும் கற்றல் முறைகளையும் பற்றி மாணவர்கள் தமது ஆசிரியர்களோடு கலந்து உரையாடி முடிவு செய்தல்
- சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படுதல்
- குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்ப கற்றல் பணிகளை தெரிவு செய்தல்

துடிப்புடன் செயல்பட்டு கற்றலை ஏற்படுத்துவதற்கான உத்திகள்:

- இருவருக்கு இடையேயான சிந்தனை பகிர்வு
- மாணவர்கள் குறிப்பிட்ட வினாவிற்கான விடை குறித்து சிந்தித்து தமது எண்ணங்களை அருகில் இருபவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல்
- சக மாணவர்களின் மீள் நோக்கு :
- ஒவ்வொரு மாணவர்களும் வகுப்பில் பிற மாணவர்களின் கட்டுரைகளையும், கற்றல் பொருள்களையும் அளிக்க செய்தல்

கற்றல்:-பொருள் :

சுய கற்றல் அல்லது தானே கற்றல்

- ஒரு ஆசிரியர் உதவியின்றி தானே கற்பது தான் சுய கற்றல்.தனி மாணவராகவோ பிறருடன் இணைந்து ஆர்வத்துடன் தாங்களே

  ஆராய்ந் து உணர்ந்து கற்றல் மதிப்பிடுதல் சுய கற்றல் எனப்படும்

- சுயகற்றலுக்கு ஏற்ற உத்திகள்
- கவனித்தல்
- உற்றுநோக்குதல்
- எழுதுதல்
- வரைதல்
- புரிதல் &  கொடுத்தல்

  வரையறை:

- ஒரு ஆசிரியருடன் வகுப்பறையில் இருப்பதை காட்டிலும் தனித்தனியாக படிக்கும் ஒரு பாடத்தை பற்றி கற்றுக்கொள்வதற்கான வழியே சுயக்கற்றல்

- ஆசிரியர் மற்றும் வகுப்பறை கற்றல் இல்லாமல் மாணவர்கள் வீட்டில் தனியாக பாடத்தை கற்பது சுயக்கற்றல் எனப்படும் .
- சுயகற்றலின் முக்கியத்துவம்:
- எப்படி, எவ்வாறு  கற்றுக் கொள்வது என்பது புரிந்து கொள்ளச்செய்கிறது
- வாழ்நாள் முழுவதும் கற்பதற்கு சுயக்கற்றல் தேவைப்படுகிறது
- வாழ்க்கையில் அனைத்து அம்சங்களையும் பற்றி தெரிந்து கொள்ள சுயக்கற்றல் தேவைப்படுகிறது
- சுயகற்றலில் ஈடுபடுவதால் தன்னன்பிக்கை மற்றும் சுய ஊக்கம் வெற்றியுடன் திகழ முடிகிறது
- சுயக் கற்றலினால் விளையும் நன்மைகள் :

- சுய கற்றல் மாணவரிடம் சிறந்த பணி ஒழுக்கத்தை வளர்த்திடுகிறது

- தமது தேர்ச்சி மாற்றம் தேர்ச்சியின்மைக்கு தானே காரணம் என்பதை உணர்த்துகிறது

- பாடப்பொருளை மிகவும் ஆழமாக கற்பதோடு அதை புரிந்து கொண்டு பிற சூழல்களில் பயன்படுத்திடல் என்பவை குறித்த சுதந்திர உணர்வை மாணவர்களுக்கு அளிக்கிறது

- சுயமாக சிந்திக்கும் ஆற்றல் உடையோராகவும் பொறுப்பேற்க கற்றுக் கொள்கின்றனர்

-

இணையாக செயல்பட்ட கற்றலை பகிர்ந்து கொள்ளல்:

- மாணவர்கள் இரண்டு பேர்களாக ஜோடி

- சேர்ந்து கற்றல் செயல்களை தமக்குள் பகிர்ந்து கொள்ளல் குழுக்கற்றலின் எளிய வடிவமாக இருப்பதோடு மட்டும் அல்லாமல் செயல் திறன் மிக்கதாகவும் விளங்குகிறது

- கற்பித்தலின் வரையறை

- கற்பித்தல் என்பது கல்வியின் அனைத்து நடவடிக்கை களும் அடங்கும்.கல்வி வழங்கும் ஒரு நபர் ஆசிரியர் என்று அழைக்கப்படுகின்றார்

- உலகின் பல பெரிய  ஆசிரியர்  கற்பித்தல் வரையறை பற்றி வரையறுத்து உள்ளார்கள்

- கற்பித்தல் என்பது வேற நபரின் நடத்தை திறனை மாற்றி அமைப்பதை இலக்காக கொண்ட இரு நபர்களுக்கு இடையே நிகழும் மனித செல்வாக்கின் ஒரு வடிவமாகும்

கற்பித்தலின்  குணங்கள்

1. கற்பித்தலின்  முக்கிய பண்பு வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி அளித்தல்

2. கற்பித்தலின்  திறமை வாய்த்த மாணவர்களுக்கு அறிவை வழங்குவதற்கான ஒரு கலை

3. கற்பித்தல் என்பது தொடர்ச்சியான செயல்

4. சரியான மதிப்பீடு முறையை பயன்படுத்துதல்

5. மாணவருக்கு மிகவும் உயர் தரமான கருத்துக்களை வழங்குதல்

6. கற்பித்தல் என்பது பாடங்களை முழு நம்பிக்கையிடன் ஆசிரியர் திறம்பட கற்பித்தல்

7. கற்பித்தல் என்பது மாணவருக்கு தகவல் தொடர் கற்பித்தல் ஆசிரியர் தகவல்களை எளிதில் புரிந்து கொள்வதன் மூலம் ஆர்வமான சிந்தனை திறன் வளர்கிறது.



கற்பித்தல் என்பது பல்வேறு பாடங்களை பற்றிய உண்மைகளையும் காரணங்களையும் அறிந்து கொள்வதற்கான அறிவியல்

பாடங்களை முழு நம்பிக்கையுடன் ஆசிரியர் திறம் பட கற்பித்தல்

வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியை வழங்குதல்

சுயக்கற்றல் மாணவர்கள் நல்ல தன்னம்பிக்கையுடன் பிரச்சினைக்கு தீர்வு காணும் திறனை வளர்த்தல்

உள்ளார்ந்த மதிப்புகள் நல் உணர்வுகளை வளர்க்க சுய கற்றல் உதவுகிறது

கற்போரை குறைந்த அளவே கற்க ஊக்குவிக்கிறது